I-UN-506
14-2-60

|| ஸ்ரீ: ||

★ திருமண்டங்குடி ★

(ஸ்ரீ தொண்டரடிப்பொடி ஆழ்வார் அவதரித்த ஸ்தலம்)

ஸ்ரீரங்கநாதப்பெருமாள் கோயில்

ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன

மஹா ஸம்ப்ரோக்ஷண மலர்.

விகாரிஞூ தைமீ 12உ (25-1-60)

—: வெளியீடு :—

திருப்பணி & ஸம்ப்ரோக்ஷணக் கமிட்டியார்.

தஞ்சாவூர் வெற்றிவேல் பிரஸ்—1960.

திருப்பணிக் கமிட்டியினர்.

(அறநிலையத்தாரால் ஏற்கப்பட்டது)

தலைவர் :

ஸ்ரீ K. V. ராமானுஜலு நாயுடு, மிராசுதார், கூனஞ்சேரி.

உப தலைவர் :

ஸ்ரீ A. R. N. சாரங்கபாணி உடையார்,
மிராசுதார், கிளாத் மர்ச்சண்ட், சுவாமிமலை.

காரியதரிசி & பொக்கிஷதார் :

பண்டித சிரோமணி A. S. ரங்கநாதாச்சாரியர்,
(டிரஸ்டி) 1068, மேலராஜ வீதி, தஞ்சை.

அங்கத்தினர்கள் :

ஸ்ரீ S. ரங்கநாத அய்யங்கார்,
(மானேஜிங் டிரஸ்டி) மேலவீதி, பாபநாசம்.

ஸ்ரீமதி M. ராஜலக்ஷ்மி அம்மாள்,
ஸ்தானீகம் டிரஸ்டி, மேலவீதி, திருஇந்தளூர், மாயூரம்.

ஸ்ரீ T. P. ராமய்யா படையாச்சி, (டிரஸ்டி)
மிராசுதார், திருமண்டங்குடி.

ஸ்ரீ D. நீலமேக அய்யங்கார்,
ரிடயர்ட் உதவி இஞ்சநீர், பாபநாசம்.

ஸ்ரீ சி. சுப்பிரமணிய படையாச்சி,
மிராசுதார், தலைவர், பஞ்சாயத்து போர்டு,
திருமண்டங்குடி.

ஸ்ரீ T. R. ஸ்ரீநிவாஸன், (ஆர்ட்டிஸ்ட்) புள்ளம்பூதங்குடி.

ஸ்ரீ S. கணபதியா பிள்ளை,
V. M. மிராசுதார், அனுமானநல்லூர்.

ஸ்ரீ பி. சிவசாமி படையாச்சி, திருமண்டங்குடி.

ஸ்ரீ D. கந்தசாமி செட்டியார்,
மிராசுதார், தெற்குவீதி, சுவாமிமலை.

ஸ்ரீ K. V. பெருமாள் படையாச்சி,
மிராசுதார், கூனஞ்சேரி.

ஸ்ரீ கோ. சிவஞானம், (சமயப் பிரசாரகர்)
மாளிகைத் திடல், திருக்கருகாவூர்.

|| ஸ்ரீ: ||

திருமண்டங்குடி, ஸ்ரீ ரங்கநாதப்பெருமாள் கோயில் மஹா சம்ப்ரோக்ஷணை மலர்.



ஸ்ரீ தொண்டரடிப்பொடி ஆழ்வார்

விகாரி, தை 12 (25-1-60)

|| ஸ்ரீ: ||

|| ஸ்ரீமதே ராமானுஜாய நம: ||

★ திருமண்டங்குடி ★

(தொண்டரடிப்பொடி ஆழ்வார் அவதரித்த ஸ்தலம்)

ஸ்ரீ ரங்கநாதப்பெருமாள் கோயில்

ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன

மஹா ஸம்ப்ரோக்ஷண மலர்.

மண்டங்குடி யென்பர் மாமறையோர் மன்னியசீர்*
தொண்டரடிப் பொடி தொன்னகரம்*—வண்டு
திணர்த்தவயல் தென்னரங்கத் தம்மானை* பள்ளி
யுணர்த்தும் பிரானுதித்த வூர்.

"மன்னியசீர் மார்கழியில் கேட்டையின்று மாநிலத்தீர்
என்னிதனுக் கேற்றம் எனிலுரைக்கேன்—துன்னுபுகழ்
மாமறையோர் தொண்டரடிப் பொடியாழ்வார் பிறப்பால்
நான்மறையோர் கொண்டாடும் நாள்.

உலகிலுள்ள **ஸ்ரீ வைஷ்ணவ ஆலயங்கள் அனைத்திலும்,** காலையில், **"கதிரவன் குணதிசைச் சிகரம் வந்தணைந்தான்**...... பள்ளி எழுந்தருளாயே" **என்ற பாசுரத்தை ஸேவித்து, எம்** பெருமானைப் பள்ளியுணர்த்துவது ஸம்பிரதாயம். **இப்பாசுரம் திருப்பள்ளி** எழுச்சியின் முதல் பாட்டாகும். **இதனைப் பாடிய** பெருமை **விப்ரநாராயணர் என்கிற தொண்டரடிப்பொடி ஆழ்வாரைச் சார்ந்ததாகும்.**

தொண்டரடிப்பொடி ஆழ்வார்

தஞ்சை ஜில்லா, பாபநாசம் தாலுகாவில், காவிரி கொள்ளிடங்களுக்கு இடையில் பல திவ்ய தேசங்களால் சூழப் பெற்றது திருமண்டங்குடி என்ற ஊர். திருக்குடந்தையி லிருந்து சுமார் 7 மைல் தூரத்தில் இது உள்ளது. இங்கு கலியுகம் பிறந்த 289-வது ஆண்டில் (B. C. 2814) பிரபவ வருஷம், மார்கழி மாதம், தேய்பிறை சதுர்தசி அன்று கேட்டை நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் செவ்வாய்க்கிழமை யன்று இத் தொண்டரடிப்பொடி ஆழ்வார் அவதரித்ததாக வைணவ மரபினர் கூறுவர். இவரது தந்தையார் ஸகல வேத விசாரதர். பூர்வசிகை அந்தணர் மரபைச் சார்ந்தவர். ஸ்ரீமந் நாராயணனின் ஸ்ரீ வைஜயந்தீ வனமாலையின் அம்ச மாக் இத் தொண்டரடிப்பொடி ஆழ்வார் பூமியில் அவதரித் தார். இளமையிலேயே ஸகல வேத, சாஸ்திரங்களையும் கற்றுணர்ந்து, திருவரங்கத்தெம்பெருமான் மீது எல்லையற்ற காதல் கொண்டு, எப்பொழுதும் த்யானத்திலேயே ஈடுபட் டிருப்பாராம். ஒருசமயம், ஆழ்ந்த யோகத்திலிருந்த இவ் வாழ்வார் முன், திருமாலிருஞ்சோலை ஸ்ரீ கள்ளழகர் பெருமா னும், திருவேங்கடத்துடையானும் எழுந்தருளி ஸேவை ஸாதித்ததாகவும் அப்பொழுது ஆழ்வார் 'நிஷ்டை' கலையாமல் அரங்கனையே தியானித்திருந்ததாகவும் மஹான்கள் கூறுவர். ஆழ்வார் ஸந்நிதியில், மூலஸ்தானத்தில் இந்தக் காக்ஷியை இன்றும் காணலாம். இவ்வாழ்வாரின் எல்லையற்ற 'பரம பக்தியைக் கண்டு மோஹித்த திருவரங்கத்தரவணையான் ஸ்ரீ ரங்கநாச்சியார், சந்திரபுஷ்கரிணி ஸஹிதமாகத் திரு மண்டங்குடிக்கு எழுந்தருளி, ஆழ்வாருக்கு ஸேவை ஸாதித்து அனுக்ரஹித்ததுடன், ஸ்ரீரங்கத்திற்கு வந்து தங்கி தம் மையே சேவித்துக்கொண்டிருக்குமாறும் நியமித்தருளினர். அதன்படியே ஆழ்வாரும், ஸ்ரீரங்கம் சென்று, நந்தவனம் அமைத்துத் திருமாலை கட்டிச் சாத்தித் துளவத் தொண்டிலே மண்டிக்கிடந்தார், 'வனமாலை'யின் அம்சமாக அவதரித்த இவ்வாழ்வார், 'மாலா' கைங்கர்யத்திலீடுபட்டது மிகவும் பொருத்தமன்றோ!

பரம பக்தியும், நைஷ்டிக பிரம்மசர்யமும் கொண்ட இவ் வாழ்வாரை மேலும் அனுக்ரஹிக்கத் திருவுள்ளங்கொண்ட ஸ்ரீ ரங்கநாதன், தேவதேவியின் தொடர்பை இவருக்கு உண் டாக்கி, பொன் வட்டில் திருடிய குற்றச்சாட்டையும் ஏற் படுத்தி, பின்னர் தாமே அரசனிடத்தில் சென்று நடந்ததை விளக்கி, இல்வாழ்வாரின் வினை களைந்து, தொண்டரடிப் பொடியாராக்கி ஆட்கொண்ட பெருமையை உலகம் அறியும். இவர் 105 ஆண்டுகள் இம் மண்ணுலகில் ஜீவித்ததாக கூறு வர். இவர் பாடிய 'திருப்பள்ளி எழுச்சி' 10 பாடல்களும், 'திருமாலை' 45 பாடல்களும், 'வேதாந்த ஸார'மாகத் திகழ் பவை. இத்தனை சிறப்புடைய இவ்வாழ்வார் அவதரித்த ஸ்தலமாகிய திருமண்டங்குடியில், இவரது ஆலயமும் இவ ருக்கு காக்ஷிகொடுத்த அரங்கநாதரின் ஆலயமும் எத்தனை முக்கியமானதென்பது கூறத் தேவையில்லை. இவ்வாலயம் இரு ஸ்தானிகம் டிரஸ்டிகளின் நிர்வாஹத்தின் கீழிருந்து வருகிறது. ஆலயம் மிகவும் ஜீர்ணமாகியிருந்ததால் இதனைத் திருப்பணி செய்வது மிகவும் அவச்யமாக இருந்தது.

26—8—56ல் இங்கு விஜயஞ் செய்த அறநிலைய இலாகா மந்திரி கனம் M. பக்தவத்ஸலம் அவர்களும், இவ்வாலயத் திற்கு விஜயம் செய்து வழிப்பட்டுத் திருப்பணியின் அவச் யத்தை வற்புறுத்தினார்கள்.

சென்னை மாநில அறநிலைய இலாகா கமிஷனர் ஸ்ரீ A. உத்தண்டராம பிள்ளை, B. A., B. L., I. A. S. அவர்களும் இத்தலத்திற்கு விஜயஞ் செய்து, இதனைத் திருப்பணி செய்து அபிவிருத்தி செய்ய விழைந்தார்கள். அதன் விளைவாக, மேலும் இரண்டு டிரஸ்டிகள், அறநிலைய இலாகாவினரால் நியமிக்கப்பட்டும், திருப்பணிக் கமிட்டி அமைக்கப்பெற்றும் ஒரு தக்க நல்ல நிலை ஏற்பட்டது.

சென்னை அறநிலைய இலாகாவினர், 1958-ம் ஆண்டு இறுதியில் இவ்வாலயத் திருப்பணிக்கு மான்ய உதவியாக ரூபாய் 5000 திருப்பணிக் கமிட்டியினரிடம் வழங்கினர். ஆலயம் முற்றிலும் ஜீர்ணமாக இருந்ததால் தக்க இஞ்சனீயர் மூலம் கொஞ்சம் கொஞ்சமாகத் திட்டமிடப்பட்டு முடிவில் திருப்பணியின் எஸ்டிமேட் ரூ. 18,431—48 ஆக உயர்ந்தது.

திருப்பணித் துவக்க விழா.

இவ்வாலயத் திருப்பணி, ஸ்ரீரங்கம் கீர்த்தன குலசேகர எம்பார் ஸ்ரீ உ. வே. விஜயராகவாச்சாரியார் ஸ்வாமியால், 26—3—59ல் துவக்கி வைக்கப்பெற்றது. ஷை விழாவிற்கு தஞ்சை நகர சபை உப தலைவராக இருந்த ஸ்ரீ வி. வேணு கோபால் நாயுடு அவர்கள் தலைமை தாங்கினார்கள். அதன் பின், திருப்பணி வேலைகள் டெண்டர் மூலம் அறிவிக்கப் பெற்றது. திருப்பணி, குறைந்த டெண்டரரான, ஒவியம் ஸ்ரீ K. நடராஜ் அவர்களால் நிறைவேற்றிவைக்கப்பெற்றது. முதலில், பஞ்சாயத் போர்டாரின் உதவியுடன் திருக்குளம் ஆழப்படுத்தப்பெற்றது. பின் திருமதில்கள், ராஜகோபுரம், விமானங்கள், மடைப்பள்ளி, அர்த்தமண்டபம் முதலியவை பழுது பார்க்கப் பெற்றன. ஆலயம் முழுவதும் தளவரிசை செய்யப்பெற்றது. புதிதாக ஒரு வாஹன மண்டபம் நிர்மாணம் செய்யப்பெற்றது. மற்றும் பல அபிவிருத்திகள் செய்யப்பெற்றன. ஆலயத்தின் எதிரில் நந்தவனம் ஒன்று அமைக்கும் முயற்சி சில மாதங்களாகவே மும்முரமாக இருந்தும், சமீபத்திலேயே அது உருவாக முடிந்தது. இனி அது ஓங்கிச் செழிக்குமாக. படித்துறை ஒன்று கட்டும் திட்டமுள்ளது. திருக்குளத்தில் ஜலமிருப்பதால் இவ்வாண்டு கோடைகாலத்தில் அதுவும் நிறைவேறிவிடும். மேலும் ராமானுஜகூடம் கட்டுதல் போன்ற பல ஆசைகள் உள. அரங்கனின் அருளால் அவை காலப்போக்கில் நிறைவேறப் பிரார்த்திக்கிறோம்.

இத்திருப்பணியில் பேரன்பு காட்டும் அறநிலைய இலாகா அமைச்சர் கனம் M. பக்தவத்ஸலம் அவர்கட்கு எங்கள் நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம். ஆரம்பமுதல் பல விதத்திலும் மிகுந்த ஆதரவு கொடுத்துவரும் மாண்புமிக்க அறநிலைய இலாகா கமிஷனர் ஸ்ரீ A உத்தண்டராம பிள்ளை, B.A., B.L., I A.S. அவர்களுக்கு நாங்கள் பெரிதும் கடமைப் பட்டுள்ளோம். சொல்லினால் நன்றி செலுத்த இயலாமை யினால், அதனை நினைந்து இறையருளை அன்னாருக்கு வேண்டு கிறோம். மேலும் முதலில் தஞ்சை டிப்டி கமிஷனராகவிருந்த ஸ்ரீ A. சக்கரை சேர்வை B A., B L. அவர்கள் எங்களைப் பலவிதத்திலும் உற்சாகப்படுத்தியும் திருப்பணி நடைபெற இயலாத சூழ்நிலையைத் தக்க முறையில் போக்கியும், பண உதவிக்கான ஆலோசனைகளைக் கூறியும் உதவினார்கள். மதுரை யிலிருந்தும் உதவி வருகிறார்கள். அவர்களைத் தொடர்ந்து தஞ்சையில் டிப்டி கமிஷனர் பதவி ஏற்ற ஸ்ரீ K. சோமசுந்தர தேசிகர், M. A. அவர்களும், பேருதவி செய்துவருகிறார்கள். அவ்விருவர்களுக்கும் திருப்பணிக் கமிட்டி பெரிதும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளது.

உதவி கமிஷனர்கள் மூவரை கண்டது இத்திருப்பணி. முதலில் ஸ்ரீ B. ரெங்காச்சாரியார், M. A. இத்திருப்பணிக்கு வித்திட்டார். ஸ்ரீ குமரன் நாயர் இதனை வளர்த்தார். தற் சமயம் பதவியிலுள்ள ஸ்ரீ T. H. விவேகானந்தம் பிள்ளை அவர்கள் திருப்பணியை பூர்த்திசெய்ய உதவி, மஹாசம்ப்ரோக்ஷணத்தையும் நிறைவேற்றி வைத்துள்ளார்கள். அம் மும் மூர்த்திகளுக்கும் எங்கள் நன்றி.

இத்திருப்பணியை இனிது நடைபெற எங்களுடன் ஒத்துழைத்த ஸ்தானிகம் டிரஸ்டிகளுக்கும் நன்றி கூற கடமைபட்டுள்ளோம்.

மேலும் பல தேவஸ்தானங்களின் டிரஸ்டிகள், இத்திருப் பணியின் பிரத்யேகத் தன்மையை உணர்ந்து இதற்கு அன் பளிப்பாக நிதி உதவினர். அவர்கள் அனைவருக்கும், மற்றும் திருப்பணி, கும்பாபிஷேகம் முதலியவைகளைச் சிறப்பிக்கும் பணியில் பங்கு கொண்ட ஒவ்வொருவருக்கும் எங்கள் மன மார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்

உண்ணுஞ் சோறுங் கண்ணன்
பருகும் நீரும் கண்ணன்
தின்னும் வெற்றிலையெல்லாங்
கண்ணன்

|| ஸ்ரீ: ||

ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் கோயில்

திருமண்டங்குடி

இவ்வாலயத் திருப்பணிக்கு (1959—60)

ரூபாய் நூறுவரை கொடுத்து நிதி உதவியவர்கள்

1.	அறநிலைய இலாகா, சென்னை	ரூ.	5000
2.	ஸ்ரீ தண்டாயுதபாணி ஸ்வாமி தேவஸ்தானம், பழநி	ரூ.	5000
3.	ஸ்ரீ கலியுக வரதராஜப் பெருமாள் கோயில் கல்லங்குறிச்சி	ரூ.	3000
4.	ஸ்ரீ பரிமள ரங்கநாதஸ்வாமி தேவஸ்தானம் திருஇந்தளூர்	ரூ.	2000
5.	ஸ்ரீ கள்ளழகர் தேவஸ்தானம் திருமாலிருஞ்சோலை	ரூ.	2000
6.	ஸ்ரீ ஸ்ரீநிவாஸப் பெருமாள் தேவஸ்தானம் நாச்சியார்கோவில்	ரூ.	1000
7.	ஸ்ரீ ஸாரநாதப் பெருமாள் தேவஸ்தானம் திருச்சேறை	ரூ.	1000
8.	ஸ்ரீ அக்னீச்வர ஸ்வாமி தேவஸ்தானம் திருப்புகலூர்	ரூ.	1000
9.	அரண்மனை தேவஸ்தானம் தஞ்சாவூர்	ரூ.	1000
10.	ஸ்ரீ பங்காரு காமாக்ஷி அம்மன் தேவஸ்தானம், தஞ்சாவூர்	ரூ.	1000
11.	நாச்சியார் தேவஸ்தானம் ஸ்ரீவில்லிபுத்தூர்	ரூ.	1000
12.	ஸ்ரீ பசுபதீச்வரர் தேவஸ்தானம் பந்தணைநல்லூர்	ரூ.	750
13.	Aleendrooloo Chetty's சாரிடீஸ் சென்னை	ரூ.	501
14.	ராமநாதபுரம் சம்ஸ்தானம், தேவஸ்தானம்	ரூ.	500

15. ஸ்ரீ ஆமருவிப் பெருமாள் தேவஸ்தானம்
தேரழுந்தூர் ரூ. 500
16. ஸ்ரீ சுவேதாரண்யேச்வரஸ்வாமி
தேவஸ்தானம், திருவெண்காடு ரூ. 500
17. ஸ்ரீ ஸ்வாமிநாதஸ்வாமி தேவஸ்தானம்
ஸ்வாமிமலை ரூ. 500
18. ஸ்ரீ நவநீதேச்வரஸ்வாமி தேவஸ்தானம்
சிக்கில் ரூ. 500
19. ஸ்ரீ பிச்சக்கட்டளை, திருக்கடயூர் ரூ. 500
20. ஸ்ரீ சந்தான ராமஸ்வாமி வகையரா
தேவஸ்தானம், நீடாமங்கலம் ரூ 300
21. ஸ்ரீ வெங்கடாசலபதி ஸ்வாமி
தேவஸ்தானம், ஒப்பிலியப்பன்கோயில் ரூ. 300
22. சௌந்திரேச்வரஸ்வாமி தேவஸ்தானம்
முத்துப்பேட்டை ரூ. 300
23. ஸ்ரீ ராஜகோபாலஸ்வாமி தேவஸ்தானம்
மன்னார்குடி ரூ. 250
24. ஸ்ரீலஸ்ரீ மஹாசன்னிதானம் அவர்கள்
தருமையாதீனம் ரூ. 250
25. ஸ்ரீ A. ஸ்ரீநிவாஸ அய்யங்கார், மன்னார்குடி ரூ. 126
26. ஸ்ரீ பார்த்தஸாரதி ஸ்வாமி தேவஸ்தானம் ரூ. 108
27. நெகமம் ஜமீன்தார் சாரிடீஸ், ஸ்ரீரங்கம் ரூ. 100
28. ஸ்ரீ B. ராஜன் செட்டியார், மன்னார்குடி ரூ. 100

(21—1—60 முடிய)

பற்றே பிறப்புண்டாக்கும் தாண்டவக் கோனே
அதை பற்றறுத்துவிடு தாண்டவக் கோனே

மஹாஸம்ப்ரோக்ஷணத்திற்கு உதவியவர்கள்.

---

1. பெரிய திருமஞ்சனமும், வீதியுலாவும்
   கபிஸ்தலம் ஸ்ரீ வெங்கடாசலபதி அன்னசத்திரம் நிதியிலிருந்து ஸ்ரீ ஜி. கருப்பய்யா மூப்பனர் உபயம்.

2. பொது அன்னதானம்
   தேப்பெருமாநல்லூர் அன்னதான சிவன் ஞாபக சங்கத்தார்.

3. நவரத்னங்கள்
   ஸ்ரீ P. A. ராஜு செட்டியார், சுவர்ண மாளிகை, கோவை.

4. அஷ்டபந்தன மருந்து
   திருக்கருகாவூர், சமயத் தொண்டர் ஸ்ரீ கோ, சிவஞானம்.

5. திருமாலை, திருப்பள்ளி எழுச்சி, பாசுரக் கல்வெட்டும் மஹாஸம்ப்ரோக்ஷண மலரும்
   திருச்சி ஜில்லா, கல்லங்குறிச்சி ஸ்ரீ கலியுக வரதராஜப் பெருமாள் கோவில் நிதியிலிருந்து, பரம்பரை தர்ம கர்த்தா ஸ்ரீ கோ. கோவிந்தசாமி படையாட்சியார்.

6. வெள்ளிக் கவசம்
   (1) ஆழ்வார் மூலவர்—(அமர்ந்த திருக்கோலம்)
   திருப்பணி கண்டிராக்டர் கூறைநாடு ஓவியம் K. நடராஜ்.

   (2) ஆழ்வார் மூலவர்
   ஆழ்வார் உற்சவர்
   இரண்டும் } (நின்ற திருக்கோலம்)

   தஞ்சை, பண்டித சிரோமணி
   ஸ்ரீ A. S. ரெங்கநாதாச்சாரியார்.

7. வெள்ளி சடாரி

சுவாமிமலை ஸ்ரீ A. R. N. சாரங்கபாணி உடையார்.

8. ஸம்ரோக்ஷணமானவுடன் புது வஸ்திரங்கள்

சுவாமிமலை ஸ்ரீ நாராயணசாமி உடையார்.

9. கருட வாஹனம் & ஸிம்மாஸனம் ரிப்பேர்

ஸ்ரீமதி ராஜலக்ஷ்மி மாதவாச்சாரியார் ஸ்தானீகம் டிரஸ்டி.

10. ஆராய்ச்சிமணி, சில பாத்திரங்கள், சில வஸ்திரங்கள் குத்துவிளக்குகள் 4

பழனி, ஸ்ரீ தண்டாயுதபாணி ஸ்வாமி தேவஸ்தானம்.

ஸ்ரீ ஜீயர் ஸ்வாமிகள் வானமாமலை மடம்,
நாங்குனேரி ரூ. 150.

ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்ரீ அஹோபில மடம்
1 மூட்டை அரிசியும், 2 வண்டி விறகும்.
(22—1—60 வரை)

மற்றும் பல அன்பர்கள் பல உதவிகள் செய்துள்ளனர். விரிவான அறிக்கை விரைவில் சமர்ப்பிக்கப்படும்.

திருப்பணியை விரைவில் நிறைவேற்றவும், மஹாஸம்ப்ரோக்ஷணத்தைச் சிறப்பாக நடத்தவும் உதவிய ஒவ்வொருவருக்கும் திருப்பணிக் கமிட்டியின் நன்றி உரித்தாகுக. இந்த ஸ்தலம், மிகவும் சிறப்புடன் என்றும் விளங்க இறைவனை வேண்டுகிறோம்.

சுபம்.

ஸ்ரீரங்கநாதப்பெருமாள் கோயில்,
திருமண்டங்குடி,
25—1—60

திருப்பணி &
ஸம்ப்ரோக்ஷணக் கமிட்டியார்.

|| ஸ்ரீ: ||

| ஸ்ரீமதே ராமாநுஜாய நம: |

தொண்டரடிப்பொடி ஆழ்வார் அருளிய

★ திருப்பள்ளி எழுச்சி ★

தமேவ மத்வா பரவாசுதேவம்
ரங்கே சயம் ராஜவதர் ஹணீயம் |
ப்ராபோதகீம் யோகிருத ஸூக்திமாலாம்
பக்தாங்க்ரிரேணும் பகவந்த மீடே ||

(திருமலையாண்டான்)

மண்டங்குடியென்பர் மாமறையோர், மன்னியசீர்
தொண்டரடிப்பொடி தொன்னகரம்,—வண்டு
திணர்த்தவயல் தென்னரங்கத் தம்மானைப், பள்ளி
உணர்த்தும் பிரானுதித்த வூர்.

(திருவரங்கப் பெருமாளரையர்.)

கதிரவன் குணதிசைச் சிகரம் வந்தணைந்தான்
கனவிருளகன்றது காலையம் பொழுதாய்,
மது விரிந்தொழுகின மாமலரெல்லாம்
வானவ ரரசர்கள் வந்து வந்தீண்டி,
எதிர்திசை நிறைந்தன ரிவரொடும் புகுந்த
இருங்களிற் றீட்டமும் பிடியொடு முரசும்,
அதிர்தலி லலைகடல் போன்றுள தெங்கும்
அரங்கத்தம்மா பள்ளி எழுந்தருளாயே (க)

கொழுங்கொடி முல்லையின் கொழுமலரணவிக்
கூர்ந்தது குணதிசை மாருத மிதுவோ,
எழுந்தன மலரணைப் பள்ளிகொள்ளன்னம்
ஈன்பனி நனைந்தத மிருஞ்சிறகுதறி,
விழுங்கிய முதலையின் பிலம்புரை பேழ்வாய்
வெள்ளெயிறுறவதன் விடத்தினுக்கனுங்கி,
அழுங்கிய வானையினருந்து யர்கெடுத்த
அரங்கத்தம்மா பள்ளி எழுந்தருளாயே. (௨)

சுடரொளி பரந்தன சூழ்திசையெல்லாம்
துன்னிய தாரகை மின்னொளி சுருங்கி,
படரொளி பசுத்தனன் பனிமதி யிவனோ
பாயிருளகன்றது பைம்பொழில் கமுகின்,
மடலிடைக் கீறிவண் பாளைகள் நாற
வைகறை கூர்ந்தது மாருத மிதுவோ,
அடலொளி திகழ்தரு திகிரியந் தடக்கை
அரங்கத்தம்மா பள்ளி எழுந்தருளாயே. (௩)

மேட்டிள மேதிகள் தளைவிடு மாயர்கள்
வேய்ங் குழலோசையும் விடைமணிக் குரலும்,
ஈட்டிய இசைதிசை பரந்தன வயலுள்
இரிந்தன சுரும்பினம் இலங்கையற் குலத்தை,
வாட்டிய வரிசிலை வானவ ரேறே
மாமுனி வேள்வியைக் காத்து, அவபிரதம்
ஆட்டிய வடுதிறல யோத்தியெம் மரசே
அரங்கத்தம்மா பள்ளி எழுந்தருளாயே (௪)

புலம்பின புட்களும் பூம்பொழில் களின்வாய்
போயிற்றுக் கங்குல் புகுந்தது புலரி
கலந்தது குணதிசைக் கனைகட லரவம்
களிவண்டு மிழற்றிய கலம்பகம் புனைந்த

அலங்கலந் தொடையல் கொண்டடி யிணைபடிவான்
அமரர்கள் புகுந்தன ராதலி லம்மா,
இலங்கையர் கோன்வழி பாடுசெய் கோயில்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே (ரு)

இரவியர் மணிநெடுந் தேரொடு மிவரோ,
இறையவர் பதினொரு விடையரு மிவரோ,
மருவிய மயிலின னறுமுக னிவனோ
மருதரும் வசுக்களும் வந்துவந் தீண்டிப்,
புரவியோ டாடலும் பாடலும் தேரும்
குமரதண்டம் புகுந் தீண்டிய வெள்ளம்,
அருவரை யனையநின் கோயில்முன் னிவரோ
அரங்கத்தம்மா பள்ளி யெழுந்தருளாயே. (சு)

அந்தரத் தமரர்கள் கூட்டங்க ளிவையோ
அருந்தவ முனிவரும்மருதரு மிவரோ
இந்திரனானையும் தானும்வந் திவனோ
எம்பெருமானுன் கோயிலின் வாசல்,
சுந்தரர் நெருக்கவிச் சாதரர் நூக்க
இயக்கரும் மயங்கினர் திருவடி தொழுவான்,
அந்தரம் பாரிடமில்லை மற்றிதுவோ,
அரங்கத்தம்மா பள்ளி எழுந்தருளாயே. (எ)

வம்பவிழ் வானவர் வாயுறை வழங்க
மாநிதி கபிலை யொண்கண்ணாடி முதலா,
எம்பெருமான் படிமக்கலம் காண்டற்கு
ஏற்பனவாயின கொண்டுநன் முனிவர்,
தும்புரு நாரதர் புகுந்தன ரிவரோ
தோன்றின னிரவியும் துலங்கொளி பரப்பி
அம்பர தலத்தில்நின் றகல்கின்ற திருள்போய்
அரங்கத்தம்மா பள்ளி எழுந்தருளாயே. (அ)

ஏதமில் தண்ணுமை யெக்கம் மத்தளியாழ்
குழல் முழவ மோடிசைதிசை கெழுமிக்
கீதங்கள் பாடினர் கின்னரர் கெருடர்கள்
கந்தரு வரவர் கங்குலு ளெல்லாம்,
மாதவர் வானவர் சாரண ரியக்கர்
சித்தரும் மயங்கினர் திருவடித் தொழுவான்
ஆதலி லவர்க்கு நாளோ லக்கமருள
அரங்கத்தம்மா பள்ளி எழுந்தருளாயே (௯)

கடிமலர்க் கமலங்கள் மலர்ந்தன விவையோ
கதிரவன் கனைகடல் முளைத்தன னிவனோ,
துடியிடை யார்சுரி குழல்பிழிந் துதறித்
துகிலுடுத் தேறினர் சூழ்புன லரங்கா,
தொடையொத்த துளவமும் கூடையும் பொலிந்து
தோன்றிய தோள்தொண்ட ரடிப்பொடி யென்னும்
அடியனை, அளியனென் றருளி யுன்னடியார்க்
காட்படுத்தாய் பள்ளி எழுந்தருளாயே. (௧௦)

தொண்டரடிப்பொடி ஆழ்வார் திருவடிகளே சரணம்.

‖ ஸ்ரீ: ‖

‖ ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ‖

தொண்டரடிப்பொடி ஆழ்வார் அருளிச்செய்த

திருமாலை

"மற்றொன்றும் வேண்டா மனமே மதிளரங்கர்,
கற்றினம் மேய்த்த கழலிணைக்கீழ்—உற்ற
திருமாலை பாடும் சீர்த்தொண்ட ரடிப்பொடியெம்
பெருமானை, எப்பொழுதும் பேசு."

(திருவரங்கப் பெருமாளரையர்)

காவலிற் புலனை வைத்து கலிதன்னைக் கடக்கப் பாய்ந்து,
நாவலிட்டு உழிதரு கின்றோம் நமன்தமர் தலைகள் மீதே;
மூவுலகு உண்டு உமிழ்ந்த முதல்வ நின்நாமம் கற்ற
ஆவலிப்பு உடமை கண்டாய், அரங்கமா நகருளானே. (1)

பச்சைமா மலைபோல் மேனி, பவளவாய், கமலச் செங்கண்
அச்சுதா அமரர் ஏறே ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய் இந்திர—லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே. (2)

வேதநூற் பிராயம் நூறு மனிசர்தாம் புகுவ ரேலும்
பாதியும் உறங்கிப் போகும் நின்றதிற் பதினை யாண்டு
பேதைபா லகன் அது ஆகும்; பிணிபசி மூப்புத் துன்பம்
ஆதலால் பிறவி வேண்டேன் அரங்கமா நகருளானே. (3)

மொய்த்தவல் வினையுள்நின்று மூன்றுஎழுத்து உடையபேரால்
கத்திர பந்தும் அன்றே பராங்கதி கண்டு கொண்டான்
இத்தனை அடியர் ஆனார்க்கு இரங்கும்நம் அரங்கன் ஆய
பித்தனை பெற்றும் அந்தோ! பிறவியுள் பிணங்கு மாறே. (4)

பெண்டிரால் சுகங்கள் உய்ப்பான் பெரியதுஓர் இடும்பை பூண்டு
உண்டுஇராக் கிடக்கும் அப்போது உடலுக்கே கரைந்து நைந்து
தண் துழாய்—மாலை மார்பன் தமர்களாய்ப் பாடி ஆடி
தொண்டுபூண்டு அமுதம் உண்ணாத் தொழும்பர்சோறு உகக்குமாறே (5)

மறம்சுவர் மதில் எடுத்து மறுமைக்கே வெறுமை பூண்டு
புறம்சுவர் ஓட்டை மாடம் புரளும்போது அறிய மாட்டீர்
அறம்சுவர் ஆகி நின்ற அரங்கனார்க்கு ஆட்செய் யாதே
புறஞ்சுவர்க் கோலஞ் செய்து புள்கௌவக் கிடக்கின்றீரே (6)

புலை—அறம் ஆகி நின்ற புத்தொடு சமணம் எல்லாம்
கலைஅறக் கற்ற மாந்தர் காண்பரோ? கேட்பரோ தாம்?
தலைஅறுப்பு உண்டும் சாகேன் சத்தியம் காண்மின் ஐயா!
சிலையினால் இலங்கை செற்ற தேவனே தேவன் ஆவான் (7)

வெறுப்பொடு சமணர் முண்டர் விதிஇல் சாக்கியர்கள் நின்பால்
பொறுப்பு அரியனகள்பேசில் போவதே நோயது ஆகி
குறிப்புஎனக்கு அடையும் ஆகில் கூடுமேல் தலையை ஆங்கே
அறுப்பதே கருமம் கண்டாய் அரங்கமா நகருளானே! (8)

மற்றும்ஓர் தெய்வம் உண்டே? மதியிலா மானிடங்காள்!
உற்றபோது அன்றி நீங்கள் ஒருவன் என்றுஉணர மாட்டீர்
அற்றம்மேல் ஒன்று அறியீர் அவன்அல்லால் தெய்வம் இல்லை
கற்றினம் மேய்த்த எந்தை கழலிணை பணிமின் நீரே. (9)

நாட்டினான் தெய்வம் எங்கும் நல்லதுஓர் அருள் தன்னாலே
காட்டினான் திரு வரங்கம் உய்பவர்க்கு உய்யும் வண்ணம்
கேட்டிரே நம்பி மீர்காள்! கருடவா கனனும் நிற்கச்
சேட்டைதன் மடியகத்துச் செல்வம் பார்த்து இருக்கின்றீரே (10)

ஒருவில்லால் ஓங்கு முந்நீர் அடைத்து உலகங்கள் உய்யச்
செருவிலே அரக்கர் கோனைச் செற்ற நம் சேவகனார்
மருவிய பெரிய கோயில் மதில் — திருவரங்கம் என்னா
கருவிலே திரு இலாதீர்! காலத்தைக் கழிக்கின் றீரே. (11)

நமனும்முற் கலனும் பேச நரகில்நின் றார்கள் கேட்க
நரகமே சுவர்க்கம் ஆகும் நாமங்கள் உடையன் நம்பி
அவனதுஊர் அரங்கம் என்னாது அயர்த்துவீழ்ந்து அளிய
மாந்தர்
கவலையுள் படுகின்றார்என்று அதனுக்கே கவல்கின்றேனே(12)

எறியுநீர் வெறிகொள் வேலை மாநிலத்து உயிர்கள் எல்லாம்
வெறிகொள் பூந் துளவமாலை விண்ணவர் கோனை ஏத்த
அறிவுஇலா மனிசர் எல்லாம் அரங்கம் என்று அழைப்பராகில்
பொறியில்வாழ் நரகம் எல்லாம் புல்எழுந்து ஒழியும்
அன்றே (13)

வண்டினம் முரலும் சோலை மயிலினம் ஆலும் சோலை
கொண்டல் மீது அணவும் சோலை குயிலினம் கூவும் சோலை
அண்டர்கோன் அமரும் சோலை அணி திரு வரங்கம் என்னா
மிண்டர்பாய்ந்து உண்ணும் சோற்றை விலக்கி நாய்க்கு
இடுமின் நீரே (14)

மெய்யர்க்கே மெய்யன் ஆகும் விதிஇலா என்னைப்போலப்
பொய்யர்க்கே பொய்யன் ஆகும் புட்கொடி உடைய கோமான்
உய்யப்போம் உணர் வினார் கட்கு ஒருவன் என்று
உணர்ந்த பின்னை
ஐயப்பாடு அறுத்துத் தோன்றும்; அழகன் ஊர்
அரங்கம் அன்றே (15)

சூதனாய் கள்வனாகித் தூர்த்தரோடு இசைந்த காலம்
மாதரார் கயற்கண் என்னும் வலையுள் பட்டு அழுந்து வேனைப்
போதரே என்று சொல்லிப் புந்தியில் புகுந்து தன்பால்
ஆதரம் பெருக வைத்த அழகன் ஊர் அரங்கம்அன்றே (16)

விரும்பிநின்று ஏத்த மாட்டேன் விதிஇலேன் மதிஒன்று
இல்லை
இரும்புபோல் வலிய நெஞ்சம் இறை இறை உருகும்
வண்ணம்
சுரும்பு அமர் சோலை சூழ்ந்த அரங்கமா கோயில் கொண்ட
கரும்பினைக் கண்டு கொண்டு என் கண்ணிணை களிக்கு
மாறே! (17)

இனிதிரைத் திவலை மோத எறியும் தண் பரவை மீதே
தனிகிடந்து அரசு செய்யும் தாமரைக் கண்ணன் எம்மான்
கனிஇருந்தனைய செவ்வாய்க் கண்ணனைக் கண்ட கண்கள்
பனி அரும்பு உதிருமாலோ என்செய்கேன் பாவியேனே (18)

குடதிசை முடியை வைத்துக் குணதிசை பாதம் நீட்டி
வடதிசை பின்பு காட்டித் தென்திசை இலங்கை நோக்கிக்
கடல்நிறக் கடவுள் எந்தை யரவணைத் துயிலுமா கண்டு
உடல்எனக்கு உருகு மாலோ என்செய்கேன் உலகத்தீரே. (19)

பாயும்நீர் அரங்கந் தன்னுள் பாம்பு அணைப்பள்ளி கொண்ட
மாயனார் திருநன் மார்பும் மரகத உருவும் தோளும்
தூயதாமரைக் கண்களும் துவர் இதழ்ப் பவள வாயும்
ஆயசீர் முடியும் தேசும் அடியரோர்க்கு அகலல் ஆமே (20)

பணிவினால் மனமது ஒன்றிப் பவளவாய் அரங்கனார்க்குத்
துணிவினால் வாழமாட்டாத் தொல்லைநெஞ்சே நீ சொல்லாய்
அணியின்ஆர் செம்பொன் ஆய அருவரை அனைய கோயில்
மணிஅனார் கிடந்த வாற்றை மனத்தினால் நினைக்கல்
ஆமே. (21)

பேசிற்றே பேசல் அல்லால் பெருமை ஒன்று உணரல் ஆகாது
ஆசற்றார் தங்கட்கு அல்லால் அறியல் ஆவானும் அல்லன்
மாசற்றார் மனத்துளானை வணங்கி நாம் இருப்பது அல்லால்
பேசத்தான் ஆவது உண்டோ பேதைநெஞ்சே நீ சொல்லாய்
(22)

கங்கையிற் புனிதம் ஆய காவிரி நடுவு பாட்டுப்
பொங்குநீர் பரந்து பாயும் பூம்பொழில் அரங்கந் தன்னுள்
எங்கள்மால் இறைவன் ஈசன் கிடந்ததுஓர் கிடக்கை கண்டும்
எங்கனம் மறந்து வாழ்கேன் ஏழையேன் ஏழையேனே! (23)

வெள்ளநீர் பரந்து பாயும் விரிபொழில் அரங்கந் தன்னுள்
கள்வனார் கிடந்த வாறும் கமலநன் முகமும் கண்டும்
உள்ளமே வலியை போலும் ஒருவன் என்று உணரமாட்டாய்
கள்ளமே காதல் செய்து உன்கள்ளத்தே கழிக்கின்றாயே (24)

குளித்துமூன்று அனலை ஓம்பும் குறிகொள் அந்தணமை தன்னை
ஒளித்திட்டேன் என்கண் இல்லை நின்கணும் பத்தன் அல்லேன்
களிப்பது என்கொண்டு நம்பீ கடல்வண்ணா கதறுகின்றேன்
அளித்துஎனக்கு அருள்செய் கண்டாய் அரங்கமா நகருள்ளானே. (25)

போதெல்லாம் போது கொண்டு உன்பொன்னடிபுனைய மாட்டேன்
தீதிலா மொழிகள் கொண்டு உன் திருக்குணம் செப்ப மாட்டேன்
காதலால் நெஞ்சம் அன்பு கலந்திலேன் அது தன்னாலே
ஏதிலேன் அரங்கர்க்கு; எல்லே! என்செய்வான் தோன்றினேனே (26)

குரங்குகள் மலையை தூக்கக் குளித்துத்தாம் புரண்டிட்டு ஓடித்
தரங்கநீர் அடைக்கல் உற்ற சலம் இலாஅணிலம் போலேன்
மரங்கள்போல் வலிய நெஞ்ச வஞ்சனேன் நெஞ்சு தன்னால்
அரங்கனார்க்கு ஆட்செய்யாதே அளியத்தேன் அயர்க்கின்றேனே. (27)

உம்பரால் அறியல் ஆகா வொளியுளார் ஆணைக்கு ஆகிச்
செம்புலால் உண்டு வாழும் முதலைமேல் சீறி வந்தார்
நம்பரம் ஆயது உண்டே நாய்களோம் சிறுமை ஓரா
எம்பிராற்கு ஆட்செய்யாதே என் செய்வான்
தோன்றினேனே? (28)

ஊர்இலேன் காணிஇல்லை உறவுமற்று ஒருவர் இல்லை;
பாரில்நின் பாத மூலம் பற்றிலேன் பரமமூர்த்தி
காரொளி வண்ணனே என் கண்ணனே கதறு கின்றேன்
ஆர்உளர் களைகண் அம்மா அரங்கமா நகருளானே (29)

மனத்தில்ஓர் தூய்மை இல்லை வாயில்ஓர் இன்சொல் இல்லை
சினத்தினால் செற்றம் நோக்கித் தீவிளி விளிவன்வாளா
புனத்துழாய் மாலையானே பொன்னிசூழ் திருவரங்கா
எனக்கு இனிக் கதிஎன் சொல்லாய் என்னைஆளுடைய
கோவே! (30)

தவத்துளார் தம்மில் அல்லேன் தனம்படைத்தாரில் அல்லேன்
உவர்த்தநீர் போல என்தன் உற்றவர்க்கு ஒன்றும் அல்லேன்
துவர்த்தசெவ் வாயினார்க்கே துவக்குஅறத் துரிசன் ஆனேன்
அவத்தமே பிறவி தந்தாய் அரங்கமா நகருளானே! (31)

ஆர்த்துவண்டு அலம்பும் சோலை அணிதிரு அரங்கந் தன்னுள்
கார்த்திரள் அனைய மேனிக் கண்ணனே உன்னைக் காணும்
மார்க்கம் ஒன்று அறிய மாட்டா மனிசரில் துரிசனாய
மூர்க்கனேன் வந்து நின்றேன் மூர்க்கனேன்
மூர்க்கனேனே (32)

மெய்யெல்லாம் போகவிட்டு விரிகுழலாரிற்பட்டுப்
பொய்எல்லாம் பொதிந்து கொண்டபோழ்க்கனேன்
வந்துநின்றேன்
ஐயனே அரங்கனே உன் அருள்என்னும் ஆசைதன்னால்
பொய்யனேன் வந்து நின்றேன் பொய்யனேன்
பொய்யனேனே (33)

உள்ளத்தே உறையும் மாலை உள்ளுவான் உணர்வொன்று
இல்லாக்
கள்ளத்தேன் நானும் தொண்டாய்த் தொண்டுக்கே
கோலம் பூண்டு
உள்ளுவார் உள்ளிற்று எல்லாம் உடன் இருந்து அறிதி என்று
வெள்கிப்போய் என்னுள்ளே நான் விலவறச்
சிரித்திட்டேனே (34)

தாவிஅன்று உலகம் எல்லாம் தலைவிளாக் கொண்ட எந்தாய்
சேவியேன் உன்னை அல்லால் சிக்கெனச் செங்கண் மாலே
ஆவியே அமுதே எந்தன் ஆருயிர் அனைய எந்தாய்
பாவியேன் உன்னை அல்லால் பாவியேன் பாவியேனே (35)

மழைக்குஅன்று வரைமுன்ஏந்தும் மைந்தனே மதுர ஆறே
உழைக்கன்றே போல நோக்கம் உடையவர் வலையுள் பட்டு
உழைக்கின்றேற்கு என்னை நோக்காது ஒழிவதே உன்னை
யன்றே
அழைக்கின்றேன் ஆதி மூர்த்தி அரங்கமா நகருளானே (36)

தெளிவிலா கலங்கல் நீர்சூழ் திருவரங்கத்துள் ஓங்கும்
ஒளியுளார் தாமே யன்றே தந்தையும் தாயும் ஆவார்
எளியதுஓர் அருளும் அன்றே என்திறத்து எம்பிரானார்
அளியன்நம் பையல் என்னார் அம்மவோ கொடியவாறே (37)

மேம்பொருள், போக விட்டு மெய்ம்மையைமிக உணர்ந்து
ஆம்பரிசு அறிந்து கொண்டு ஐம்புலன் அகத்து அடக்கிக்
காம்புஅறத் தலை சிரைத்துஉன் கடைத்தலை இருந்து வாழும்
சோம்பரை உகத்தி போலும்; சூழ்புனல் அரங்கத்தானே (38)

அடிமையிற் குடிமை இல்லா வயல்சதுப் பேதி மாரிற்
குடிமையிற் கடைமை பட்ட குக்கரில் பிறப்பரேலும்
முடியினில் துளபம் வைத்தாய் மொய்கழற்கு அன்புசெய்யும்
அடியரை உகத்தி போலும் அரங்கமா நகருளானே (39)

திருமறு மார்வ நின்னைச் சிந்தையுள் திகழவைத்து
மருவிய மனத்தர் ஆகில் மாநிலத்து உயிர்கள் எல்லாம்
வெருவுறக் கொன்று சுட்டிட்டு ஈட்டிய வினையரேலும்
அருவினைப் பயன துய்யார் அரங்கமா நகருளானே (40)

வானுளார் அறியல் ஆகா வானவர் என்பர் ஆகில்
தேனிளாம் துளப மாலைச் சென்னியாய் என்பர் ஆகில்
ஊனம் ஆயினகள் செய்யும் ஊனகாரகர்களேலும்
போனகம் செய்த சேடம் தருவரேல் புனிதம் அன்றே (41)

பழுது இலா ஒழுகல் ஆற்றுப் பலசதுப் பேதிமார்கள்
இழிகுலத் தவர்களேலும் எம்அடி யார்கள் ஆகில்
தொழுமின்நீர் கொடுமின் கொண்மின் என்று நின்னோடும் ஒக்க
வழிபட அருளினாய் போல் மதில் திருவரங்கத்தானே (42)

அமரஓர் அரங்கம் ஆறும் வேதம்ஓர் நான்கும் ஓதித்
தமர்களில் தலைவராய சாதி அந்தணர்களேலும்
நுமர்களைப் பழிப்பர் ஆகில் நொடிப்பது ஓர் அளவில் ஆங்கே
அவர்கள்தாம் புலையர் போலும் அரங்கமா நகருளானே (43)

பெண்உலாம் சடையினானும் பிரமனும் உன்னைக் காண்பான்
எண்இலா ஊழி ஊழி தவம்செய்தார் வெள்கி நிற்ப
விண்உளார் வியப்ப வந்து ஆனைக்கு அன்று அருளை ஈந்த
கண்ணறா உன்னை என்னோ களைகணாக் கருது மாறே (44)

வளஎழும் தவள மாட மதுரைமா நகரந்தன்னுள்
களவமால் யானை கொன்ற கண்ணனை அரங்க மாலைத்
துளவத்தொண்டு ஆய தொல்சீர்த் தொண்டரடிப் பொடிச் சொல்
இளையபுன் கவிதை யேலும் எம்பிராற்கு இனியவாறே (45)

தொண்டரடிப்பொடி ஆழ்வார் வாழித் திருநாமம்.

(ஸ்ரீ மணவாள மாமுநிகள் அருளியது.)

★

மண்டங்குடி அதனை வாழ்வித்தோன் வாழியே
மார்கழியில் கேட்டைதனில் வந்துதித்தான் வாழியே
தெண்டிரைசூ ழரங்கரையே தெய்வமென்றான் வாழியே
திருமாலை ஒன்பதிற் றைந்தும் செப்பினான் வாழியே
பண்டு திருப்பள்ளி யெழுச்சிப் பத்துரைத்தான் வாழியே
பாவையர்கள் கலவிதனைப் பழித்த செல்வன் வாழியே
தொண்டுசெய்து துளவத்தால் துலங்கினான் வாழியே
தொண்டரடிப்பொடி யெம்மான் துணைப்பதங்கள் வாழியே.

ஸ்ரீ வேதாந்த தேசிகர் அருளிய

★ பிரபந்த ஸாரம். ★

"மன்னுமதிள் திருமண்டங் குடிதான் வாழ
மார்கழி மாதக் கேட்டை நாளில் வந்து*
துன்னுபுகழ் தொண்டரடிப் பொடியே! நீமுன்
துழாய்மாலைப் பணியடிமை செய்து நாளும்*
தென்னரங்க மணவாளர்க் கன்பு மிக்குச்
செப்பியநற் றிருமாலை நாற்பத் தைந்தும்*
பன்னியநற் றிருப்பள்ளி யெழுச்சிப் பத்தும்*
பழவடியே னுக்கருள்செய் பரிந்து நீயே."

திருமண்டங்குடிக்கு அருகில்
★ ஸ்ரீ வைஷ்ணவ திவ்ய தேசங்கள். ★

1. திருமங்கை ஆழ்வார் மங்களாசாஸனம் செய்த திருப்புள்ளம்பூதங்குடி (ஜடாயுவிற்கு மோக்ஷமளித்த ஸ்தலம்) —கிழக்கே 4 பர்லாங் தூரம்.

2. ஷை ஆழ்வார் மங்களாசாஸனம் செய்த திருஆதனூர் (பெருமாள்) திருவரங்கத் திருப்பணி செய்தவர்கட்குப் படிபோட்ட ஸ்தலம்)—அங்கிருந்து 4 பர்லாங் தூரம்.

3. திருமழிசை ஆழ்வார் மங்களாசாஸனம் பெற்ற திருக்கண்ணன் கவித்தலம் (கஜேந்திரனுக்கு மோக்ஷமளித்ததைக் காண்பித்த இடம்) —மேற்கே 3½ மைல்.

4. திருமங்கை ஆழ்வார் பாசுரம் பெற்ற கூடலூர் (ஆடுதுரைப் பெருமாள்கோயில்) - அங்கிருந்து 3 மைல்.

5. திருமங்கை ஆழ்வார் பாசுரம்பெற்ற நந்திபுரவிண்ணகரம் (நாதன்கோயில்) (நந்தி தேவர் பூஜித்த ஸ்தலம்) — மண்டங்குடியிலிருந்து தெற்கே 4 மைல்.

6. பல ஆழ்வார்கள் ஈடுபட்ட திருக்குடந்தை -தென்கிழக்கே 5 மைல். மற்றும் பல.

அருகிலுள்ள பதிகம்பெற்ற சிவாலயங்கள்.

1. மஹா சிவராத்திரி க்ஷேத்ரமான திருவைகாவூர் (2 மைல் வடக்கே.)

2. அர்ச்சுனன் பாசுபதாஸ்திரம் பெற்ற திருவிஜயமங்கை (2½ மைல் வடகிழக்கில்)

3. பிரளயத்திலும் நீர் உள்ளே புகாத க்ஷேத்ரம் திருப்புறம்பயம் (3½ மைல் வடகிழக்கில்)

4. கஜபிருஷ்ட விமானமுடையது திருஇன்னம்பர் (3 மைல் கிழக்கே)

5. 6 படை வீடுகளில் ஒன்றான திருவேரகம் (சுவாமிமலை) (தென்கிழக்கில் 3 மைல்)

மலரைத் தொகுத்தவர் :—

பண்டித சிரோமணி *A. S. ரங்கநாதாச்சாரியார்*, தஞ்சை.